**மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம்,**

**விருதுநகர் மாவட்டம்.**

DISTRICT RECRUITMENT BUREAU

VIRUDHUNAGAR DISTRICT

............... ........................

## அறிவிக்கை எண்: 01 / 2022 நாள்: 13.10.2022

விருதுநகர் மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் நியாயவிலைக் கடைகளுக்கு விற்பனையாளர்கள் (**Salesman**) மற்றும் கட்டுநர்கள் (**Packer**) பதவிகளுக்கு நேரடி நியமனம் செய்வதற்கான விண்ணப்பங்கள் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து **https://www.vnrdrb.net** என்ற இணையதளம் வழியாக **Online மூலம் மட்டுமே**. **14.11.2022 அன்று பிற்பகல் 5.45** மணி வரை வரவேற்கப்படுகின்றன.

| வ. எண். | நேரடி நியமன பதவி விவரம் | சம்பள விகிதம் | கூட்டுறவு நிறுவனத்தின் பெயர் | காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | நியாய விலைக்கடை விற்பனையாளர் (Salesman) | 1. தொகுப்பு ஊதியம் ரூ. 6250/- நியமன நாளிலிருந்து ஓராண்டு வரை<br>2. ஓராண்டுக்குப் பிறகு ஊதிய விகிதம் ரூ. 8600-29000 | விருதுநகர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை | 8 |
| | | | விருதுநகர் வர்த்தகர் காரியஸ்தர்கள் கூட்டுறவு பண்டக சாலை | 3 |
| | | | ஆவுடையாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | வள்ளியூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | செங்குன்றாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 2 |
| | | | நக்கலக்கோட்டை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| | நியாய விலைக்கடை விற்பனையாளர் (Salesman) | 1. தொகுப்பு ஊதியம் ரூ. 6250/- நியமன நாளிலிருந்து ஓராண்டு வரை<br>2. ஓராண்டுக்குப் பிறகு ஊதிய விகிதம் ரூ. 8600-29000 | மணிப்பார்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | ஆர். 2 புளியம்பட்டி கூட்டுறவு பண்டகசாலை | 1 |
| | | | பாலையம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | பந்தல்குடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 3 |
| | | | வாழ்வாங்கி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | குருந்தமடம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 2 |
| | | | ஆத்திபட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 3 |
| | | | ட்டி. மீனாட்சிபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | கோபாலபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | வெள்ளையாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | சின்னவள்ளிக்குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | பாலவநத்தம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| | நியாய விலைக்கடை விற்பனையாளர் (Salesman) | 1. தொகுப்பு ஊதியம் ரூ. 6250/- நியமன நாளிலிருந்து ஓராண்டு வரை<br>2. ஓராண்டுக்குப் பிறகு ஊதிய விகிதம் ரூ. 8600-29000 | ம. ரெட்டியபட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 2 |
| | | | காளையார்கரிசல்குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | அருணாசலபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | முத்துராமலிங்கபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | தொப்பலாக்கரை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 3 |
| | | | செங்குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | வீரசோழன் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | இசலி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | உலக்குடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | தர்மம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 2 |
| | | | செம்பொன்நெருஞ்சி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | காரியாபட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 2 |

| | | | | |
|---|---|---|---|---|
| | நியாய விலைக்கடை விற்பனையாளர் (Salesman) | 1. தொகுப்பு ஊதியம் ரூ. 6250/- நியமன நாளிலிருந்து ஓராண்டு வரை<br>2. ஓராண்டுக்குப் பிறகு ஊதிய விகிதம் ரூ. 8600-29000 | கல்குறிச்சி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 2 |
| | | | மல்லாங்கிணர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 3 |
| | | | முடுக்கன்குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | வலுக்கலொட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | ஆவியூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | அரசகுளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | ராம்கோ குரூப் தொடக்க கூட்டுறவு பண்டகசாலை | 1 |
| | | | இராஜபாளையம் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை | 5 |
| | | | சத்திரப்பட்டி கூட்டுறவு பண்டகசாலை | 2 |
| | | | முகவூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 2 |
| | | | தளவாய்புரம் கூட்டுறவு பண்டகசாலை | 2 |
| | | | முதுகுடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | கிருஷ்ணாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 2 |

| | | | | |
|---|---|---|---|---|
| | நியாய விலைக்கடை விற்பனையாளர் (Salesman) | 1. தொகுப்பு ஊதியம் ரூ. 6250/- நியமன நாளிலிருந்து ஓராண்டு வரை<br>2. ஓராண்டுக்குப் பிறகு ஊதிய விகிதம் ரூ. 8600-29000 | குறிச்சியார்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | மல்லி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 2 |
| | | | பாட்டக்குளம் சல்லிபட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 3 |
| | | | மம்சாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 2 |
| | | | ப்பி.ராமச்சந்திராபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 2 |
| | | | மம்சாபுரம் கூட்டுறவு பண்டகசாலை | 1 |
| | | | ஏ.இராமலிங்காபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | படிக்காசுவைத்தான்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 2 |
| | | | அத்திகுளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | தொம்பக்குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | நாச்சியார்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | வத்ராப் கூட்டுறவு பண்டகசாலை | 4 |
| | | | சுந்தரபாண்டியம் கூட்டுறவு பண்டகசாலை | 2 |

| | | | | |
|---|---|---|---|---|
| | நியாய விலைக்கடை விற்பனையாளர் (Salesman) | 1. தொகுப்பு ஊதியம் ரூ. 6250/- நியமன நாளிலிருந்து ஓராண்டு வரை<br>2. ஓராண்டுக்குப் பிறகு ஊதிய விகிதம் ரூ. 8600-29000 | மகாராஜபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | சேதுநாராயணபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | தைலாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | கீழக்கோட்டையூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | அயன்கரிசல்குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | சிவகாசி பொது அலுவலர்கள் கூட்டுறவு பண்டகசாலை | 2 |
| | | | சிவகாசி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் | 2 |
| | | | செங்கமலநாச்சியார்புரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 2 |
| | | | மங்கலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | கே.கோபாலன்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | நாகலாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | மாரனேரி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கோப்பையநாயக்கன்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | நடையனேரி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | பேராபட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | கட்டளைபட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | இனாம்நாரணாபுரம் கூட்டுறவு பண்டகசாலை | 1 |
| | நியாய விலைக்கடை விற்பனையாளர் (Salesman) | 1. தொகுப்பு ஊதியம் ரூ. 6250/- நியமன நாளிலிருந்து ஓராண்டு வரை<br>2. ஓராண்டுக்குப் பிறகு ஊதிய விகிதம் ரூ. 8600-29000 | திருத்தங்கல் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | வெள்ளூர் முத்துக்குமாரபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | சதானந்தபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | தாயில்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 3 |
| | | | டி.கரிசல்குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | கல்லமநாயக்கன்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | குண்டாயிருப்பு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| | நியாய விலைக்கடை விற்பனையாளர் (Salesman) | 1. தொகுப்பு ஊதியம் ரூ. 6250/- நியமன நாளிலிருந்து ஓராண்டு வரை<br>2. ஓராண்டுக்குப் பிறகு ஊதிய விகிதம் ரூ. 8600-29000 | மம்சாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 2 |
| | | | எஸ். சுப்பிரமணியபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | கே.கோபாலபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | ஏழாயிரம்பண்ணை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | குகன்பாறை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 2 |
| | | | கொம்மங்கியாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | செவல்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | ப்பி. திருவேங்கடபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | கொல்லபட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 2 |
| | | | கே. சொக்கலிங்கபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | பி. லட்சுமியாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | சூரங்குடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| | நியாய விலைக்கடை விற்பனையாளர் (Salesman) | 1. தொகுப்பு ஊதியம் ரூ. 6250/- நியமன நாளிலிருந்து ஓராண்டு வரை<br>2. ஓராண்டுக்குப் பிறகு ஊதிய விகிதம் ரூ. 8600-29000 | நென்மேனி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 2 |
| | | | இராமலிங்காபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | கோசுக்குண்டு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | சடையம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 1 |
| | | | மொத்தம் | 146 |

| வ. எண். | நேரடி நியமன பதவி விவரம் | சம்பள விகிதம் | கூட்டுறவு நிறுவனத்தின் பெயர் | காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 2. | நியாய விலைக்கடை கட்டுநர் ( Packer) | தொகுப்பு ஊதியம் ரூ. 5500/- நியமன நாளிலிருந்து ஓராண்டு வரை ஓராண்டுக்குப் பிறகு ஊதிய விகிதம் ரூ. 7800-26000 | விருதுநகர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை | 11 |
| | | | ஆர். 2 புளியம்பட்டி கூட்டுறவு பண்டகசாலை | 1 |
| | | | இராஜபாளையம் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை | 4 |
| | | | திருவில்லிபுத்தூர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் | 2 |
| | | | மொத்தம் | 18 |

குறிப்பு : மதிப்பிடப்பட்ட காலிப்பணியிடங்களின் (Estimated Vacancy) எண்ணிக்கை தற்காலிகமானது (Tentative) மற்றும் மாற்றத்திற்கு உட்பட்டது.

## 1. நிபந்தனைகள்:-

1. மேற்படி பதவிகளுக்கான நேரடி நியமனத்தின்போது அரசுப் பணியாளர்கள் தேர்வுக்குப் பின்பற்றப்படும் வகுப்பு சுழற்சி முறை ஒட்டு மொத்த நியமனத்திற்கும் கீழ்கண்டவாறு பின்பற்றப்படும்.

| பதவி | மொத்த காலிப் பணியிடம் | வகுப்பு வாரி இட ஒதுக்கீடு | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | பொது GT | பிற்படுத்தப் பட்டோர் BC | பிற்படுத்தப் பட்டோர் (இஸ்லாமியர்) BC(M) | மிகவும் பிற்படுத்த பட்டோர் / சீர்மரபினர் MBC/DNC | ஆதி திராவிடர் SC | ஆதி திராவிடர் அருந்ததியர் SC(A) | பழங்குடி யினர் ST |
| 1. விற்பனை யாளர் | 146 | 45 | 37 | 6 | 29 | 22+1* | 4 | 2 |
| 2. கட்டுநர் | 18 | 6 | 4 | 1 | 4 | 2 | 1 | - |

* (1 பணியிடம் முன்நிரப்பப்படாத முன்னாள் இராணுவத்தினர் உட்பட )

**2. நியமனத்தின்போது தகுதியான பெண் விண்ணப்பதாரர்கள் போதுமான அளவு இல்லாதபோது பெண்களுக்கான ஒதுக்கீடு எண்ணிக்கையைத் தகுதி வாய்ந்த அதே வகுப்பினைச் சார்ந்த ஆண்களைக் கொண்டு நிரப்பப்படும்.**

**3. இத்தெரிவுக்கு நடைமுறையில் உள்ள தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக்குப் பின்பற்றப்படும் இட ஒதுக்கீடு மற்றும் இனச் சுழற்சி முறை ஒட்டு மொத்த நியமனத்திற்கும் பின்பற்றப்படும்.**

4. மேற்குறிப்பிட்ட காலிப்பணியிடங்களில் பெண்கள், ஆதரவற்ற விதவைகள், முன்னாள் இராணுவத்தினர், தமிழ் வழியில் பயின்றோர், மாற்றுத் திறனாளிகள் போன்ற இனங்களின் கீழ் வரும் காலிப் பணியிடங்களுக்கான இட ஒதுக்கீடு விதிகள் நடைமுறையில் உள்ள அரசு ஆணைகளின்படி பின்பற்றப்படும்.

5. மேற்படி சம்பள விகிதம் மற்றும் இதரப் படிகள் மேற்குறிப்பிட்ட கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர் பணிநிலை குறித்த சிறப்புத் துணைவிதிகளுக்குட்பட்டு அமையும்.

6. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் அவர்களுக்கு ஒதுக்கப்படும் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தின் துணைவிதிகளுக்குட்பட்டு பணியாற்ற வேண்டும்.

**7. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்களின் தெரிவு முற்றிலும் தற்காலிகமானதே.**

8. மேற்படி பணியிடங்களுக்கான தேர்வு குறித்து ஏதேனும் முறையீடு செய்வதாயின் இத்தேர்வு முடிவு வெளியிடப்பட்ட 90 நாட்களுக்குள் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தில் உரிய காரணங்களுடன் மேல் முறையீடு செய்யப்பட வேண்டும். அதற்குப் பின்னர் பெறப்படும் மேல்முறையீடுகள் ஏற்கப்படமாட்டாது.

## 2. உடற்தகுதி சான்றிதழ்:-

தெரிவு செய்யப்படும் மாற்றுத் திறனாளிகள், தங்களது குறைபாடு தாங்கள் தெரிவு செய்யப்படும் பதவிகளுக்குரிய பொறுப்புகளை முழுத்திறனுடன் நிறைவேற்றுவதற்குத் தடையாக இருக்காது என்பதற்கான சான்றிதழை மருத்துவக் குழுவிடம் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

## 3. தகுதிகள்:-

### அ. வயது (01.07.2022 அன்றுள்ளவாறு)

1. விண்ணப்பதாரர்கள் 01.07.2022-அன்று 18 வயது பூர்த்தி அடைந்தவர்களாக இருக்க வேண்டும்.

**வயது உச்ச வரம்பு**

| | | |
|---|---|---|
| i) | ஆதிதிராவிடர், அருந்ததியர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) மற்றும் இவ்வகுப்புகளைச் சார்ந்த முன்னாள் இராணுவத்தினர் மற்றும் மாற்றுத் திறனாளிகள். | வயது வரம்பு இல்லை |
| ii) | இதர வகுப்பினர் (OC) | 32 வயது |
| iii) | அனைத்து இனத்தைச் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் | வயது வரம்பு இல்லை |
| iv) | இதர வகுப்பினைச் (OC) சார்ந்த முன்னாள் இராணுவத்தினர் | 50 வயது |
| v) | இதர வகுப்பினைச் (OC) சார்ந்த மாற்றுத் திறனாளிகள் | 42 வயது |

### ஆ. கல்வித் தகுதிகள்:-

| | | |
|---|---|---|
| 1. | விற்பனையாளர் | மேல்நிலை வகுப்பு (+2 தேர்ச்சி) (அல்லது) அதற்கு இணையான கல்வி தகுதி தேர்ச்சி |
| 2. | கட்டுநர் | பள்ளி இறுதி வகுப்பு தேர்ச்சி (பத்தாம் வகுப்பு தேர்ச்சி) |

## 4. தமிழ் மொழித் திறன்:-

விண்ணப்பதாரர் இந்த அறிவிப்பு வெளியிடும் நாளன்று தமிழ் மொழியில் எழுதப் படிக்க போதுமான திறன் பெற்றவராக இருக்க வேண்டும்.

## 5. தெரிவு முறை :-

விண்ணப்பதாரர்கள் கல்வித்தகுதியில் பெற்ற மதிப்பெண்களுக்கு அளித்த மதிப்பு மற்றும் நேர்முகத் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் ஆகியவற்றின் மொத்த மதிப்பெண்கள் அடிப்படையிலும், விண்ணப்பதாரர் சார்ந்துள்ள வகுப்பு வாரியான இன சுழற்சி அடிப்படையிலும், தொடர்புடைய இதர அரசாணைகள் மற்றும் சட்டப் பிரிவுகளின் கீழ் வரும் முன்னுரிமைகளின் அடிப்படையிலும் தெரிவு செய்யப்படுவர். தெரிவு செய்யப்பட்ட பட்டியல் இணையதளத்தில் வெளியிடப்படும்.

விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்விற்குக் கட்டாயமாக நேரில் வருகை புரியவேண்டும். நேர்முகத் தேர்விற்கு வருகை புரியாத விண்ணப்பதாரர்கள் மேற்படி பணியிடங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட மாட்டார்கள். இதுதொடர்பாக எந்த உரிமையும் கோர இயலாது. நேர்முகத் தேர்விற்கு அழைப்பாணை அனுப்பப்பட்டதை மட்டுமே காரணமாக வைத்து உரிமை கோர இயலாது.

## 6. காலிப் பணியிடங்களுக்கான விருப்பம் தெரிவித்தல்

விண்ணப்பதாரர்கள், தாங்கள் எந்த நிறுவனத்தின் நியாய விலைக் கடைக்கு பணியமர்த்தப்பட வேண்டும் என்பதற்கான விருப்பத்தை நேர்முகத் தேர்வின்போது தெரிவிக்க வேண்டும். விண்ணப்பதாரர்களின் விருப்பத்தினை மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரர்களின் விருப்பத்தின் அடிப்படையில் அவர்களுக்கான பணியிடம் ஒதுக்கப்பட இயலாத நிலை ஏற்பட்டால் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தின் முடிவின்படி அவர்களுக்குப் பணியிடம் ஒதுக்கப்படும். இது தொடர்பாக மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் எடுக்கப்படும் முடிவே இறுதியானது. இதற்காக தனியாக கலந்தாய்வு (Counselling) ஏதும் நடைபெறாது.

## 7. விண்ணப்பிக்கும் முறை:-

அறிவிக்கப்பட்டுள்ள காலிப்பணியிடங்களுக்கான விண்ணப்பம் **https://www.vnrdrb.net என்ற இணையதளத்தில் ஆன்லைன் மூலம் மட்டுமே பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.** நேரிலோ அல்லது தபாலிலோ பெறப்படும் விண்ணப்பங்கள் எந்தவித முன்னறிவிப்புமின்றி நிராகரிக்கப்படும் என்பதை அறியவும்.

**விண்ணப்பதாரர்கள் இணையதளம் மூலம் தங்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் முன் கீழ்க்கண்டவற்றை உறுதி செய்துகொள்ள வேண்டும்.**

அ) விண்ணப்பப் படிவங்கள் இணையதளம் மூலம் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

ஆ) விண்ணப்பப் படிவங்களுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை அவற்றிற்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் ஸ்கேன் செய்யப்பட்டு பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

| | |
|---|---|
| 1. | விண்ணப்பதாரரின் புகைப்படம் -50 kb அளவுக்கு மிகாமல் (jpeg or jpg format) |
| 2. | விண்ணப்பதாரரின் கையெழுத்து - 50 kb அளவுக்கு மிகாமல் (jpeg or jpg format) |
| 3. | விண்ணப்பதாரரின் சாதிச் சான்றிதழ் – 200 kb அளவுக்கு மிகாமல் (pdf file) |
| 4. | நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதிக்கான சான்றிதழ்– 200 kb அளவுக்கு மிகாமல் (pdf file) |
| 5. | குடும்ப அட்டை – 200 kb அளவுக்கு மிகாமல் (pdf file)<br>(அல்லது)<br>வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை (pdf file) |
| 6. | "SBI Collect" என்ற சேவையைப் பயன்படுத்தி Online மூலம் செலுத்தப்பட்ட விண்ணப்பக் கட்டண இரசீது செலுத்தியிருப்பின் அந்த இரசீது (pdf file)<br>(அல்லது)<br>விருதுநகர் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியில் நேரடியாக செலுத்தியிருப்பின் (DRB Copy of the pay-in-slip) பதிவேற்றம் செய்யப்பட வேண்டும் - 100 kb அளவுக்கு மிகாமல் (pdf file) |
| 7. | மாற்றுத் திறனாளி எனில் அதற்கான சான்றிதழ் – 200 kb அளவுக்கு மிகாமல் (pdf file) |
| 8. | ஆதரவற்ற விதவை எனில் அதற்கான சான்றிதழ் – 200 kb அளவுக்கு மிகாமல் (pdf file) |
| 9. | முன்னாள் இராணுவத்தினர் எனில் அதற்கான சான்றிதழ் – 200 kb அளவுக்கு மிகாமல் (pdf file) |
| 10. | ஏற்கனவே 2020-ஆம் ஆண்டு விற்பனையாளர்கள் மற்றும் கட்டுநர்கள் பணியிடங்களுக்கு விண்ணப்பித்தவர்கள் மீண்டும் இந்தமுறை விண்ணப்பிக்கும் போது கடந்த முறை அளித்த விண்ணப்ப நகல் / வங்கி செலான் / நேர்முகத் தேர்விற்கு அனுப்பப்பட்ட அழைப்பு கடிதம் இவற்றில் ஏதேனும் ஒன்று 200 kb அளவுக்கு மிகாமல் (pdf file). |
| 11. | தமிழ் வழியில் பயின்றதற்கான சான்றிதழ் ( அரசாணை (நிலை) எண் 82, மனிதவள மேலாண்மை (எஸ்) துறை, நாள் 16.08.2021 இன் இணைப்பில் உள்ள படி) – 200 kb அளவுக்கு மிகாமல் (pdf file) |
| 12. | முன்னுரிமை கோரும் இனத்திற்கான/ இனங்களுக்கான சான்றிதழ் – 200 kb அளவுக்கு மிகாமல் (pdf file) |

இ) "ஆதரவற்ற விதவை" என்பது அனைத்து வழியிலிருந்தும் பெறும் மொத்த மாத வருமானம் ரூ.4,000/-த்திற்கும் (ரூபாய் நான்காயிரம்) குறைவாகப் பெறுகின்ற ஒரு விதவையைக் குறிப்பதாகும். இவ்வருமானம், குடும்ப ஓய்வூதியம் அல்லது தொழிற்கல்வி பெற்றவர்களின் சுயதொழில் மூலம் ஈட்டும் வருமானம் உள்ளிட்ட மற்ற வருமானங்கள் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகும். இத்தகைய விண்ணப்பதாரர்கள் உரிய **வருவாய்**

**கோட்ட அலுவலர் அல்லது உதவி / சார் ஆட்சியரிடமிருந்து** நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் சான்றிதழைப் பெற்று சமர்ப்பிக்க வேண்டும். விவாகரத்து பெற்றவர், கணவரால் கைவிடப்பட்டவர் ஆதரவற்ற விதவையாகக் கருதப்பட மாட்டார். மறுமணம் புரிந்தவர் ஆதரவற்ற விதவையாகக் கருதப்பட மாட்டார்.

## 8. விண்ணப்பக் கட்டணம்:-

விற்பனையாளர் விண்ணப்பக் கட்டணம் ரூ.150/- மற்றும் கட்டுநர் (Packers) விண்ணப்பக் கட்டணம் ரூ.100/- ஆகும்.

ஆதிதிராவிடர், பழங்குடியினர், அனைத்துப் பிரிவையும் சார்ந்த மாற்றுத் திறனாளிகள், அனைத்துப் பிரிவையும் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் ஆகியோருக்கு இக்கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.

விண்ணப்பக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ள மாற்றுத்திறனாளிகள் சமூக நலத்துறை அலுவலரிடமிருந்து சான்றிதழும் மருத்துவச் சான்றிதழும் பெற்றிருக்க வேண்டும். ஆதரவற்ற விதவைகள், மேலே 7 (இ)-இல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு உரிய அலுவலரிடமிருந்து சான்று பெற்றிருக்க வேண்டும்.

முன்னாள் இராணுவத்தினரைப் பொறுத்தவரை முதல் இரண்டு முறை மட்டும் கட்டணம் செலுத்தத் தேவையில்லை.

ஏற்கனவே 2020-ஆம் ஆண்டு விற்பனையாளர்கள் மற்றும் கட்டுநர்கள் பணியிடங்களுக்கு விண்ணப்பித்தவர்கள் மீண்டும் இந்தமுறை விண்ணப்பிக்கும் போது கடந்த முறை அளித்த விண்ணப்ப நகல் / வங்கி செலான் / நேர்முகத் தேர்விற்கு அனுப்பப்பட்ட அழைப்பு கடிதம் இவற்றில் ஏதேனும் ஒன்றினை 200 kb அளவுக்கு மிகாமல் (pdf file) ஆன்லைனில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

## 9. நேர்முகத் தேர்வு :-

அ) தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களுக்கான நேர்முகத் தேர்வு அந்தந்த மாவட்ட தலைநகரில் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் நடத்தப்படும். நேர்முகத் தேர்விற்கு அழைப்புக் கடிதம் பெற்ற விண்ணப்பதாரர்கள் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் நடத்தப்படும் நேர்முகத் தேர்வில் தங்கள் சொந்த செலவில் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும்.

ஆ) நேர்முகத் தேர்வில் கலந்து கொள்வதற்காக அழைக்கப்படவுள்ள நபர்களின் பெயர்ப்பட்டியல் விருதுநகர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தின் இணையதளம் வழியாக வெளியிடப்படும்.

இ) நேர்முகத் தேர்வு நடைபெறுவது தொடர்பான விவரங்கள் மின்னஞ்சல் (E-Mail) / குறுஞ்செய்தி (SMS) மூலம் விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம், நாள், நேரம் ஆகிய விவரங்கள் அடங்கிய நேர்முகத் தேர்விற்கான அழைப்புக் கடிதங்களை, விண்ணப்பதாரர்கள் இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும். அழைப்புக் கடிதத்துடன் வராத விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

ஈ) நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதியில் பெற்ற மதிப்பெண்களின் மதிப்பு (weightage for academic marks) மற்றும் நேர்முகத் தேர்வில் அளிக்கப்பட்ட சராசரி மதிப்பெண்கள் முறையே 50 : 50 என்ற விகிதத்தில் இருக்கும்.

**(<u>முக்கிய குறிப்பு</u>:-**

**2020-2021-ஆம் கல்வி ஆண்டில் பத்தாம் வகுப்பில் மதிப்பெண் குறிப்பிடப்படாமல் ஒவ்வொரு பாடத்திற்கும் எதிராக மதிப்பெண் குறிப்பிடாமல் வெறும் PASS என்று குறிப்பிட்டு வழங்கப்பட்ட மதிப்பெண் சான்றிதழை கொண்டுள்ள விண்ணப்பதாரர்கள் தாங்கள் படித்த பள்ளியில் 9-ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழினை அந்தத் தலைமை ஆசிரியரின் சான்றொப்பம் பெற்று (மொத்த மதிப்பெண்கள், பெற்ற மதிப்பெண்கள் ஆகியவற்றை குறிப்பிட்டு) அதனை, 10-ஆம் வகுப்பு PASS என்று வழங்கப்பட்ட மதிப்பெண் சான்றிதழுடன் பதிவேற்றம் செய்ய வேண்டும். இத்தகைய நேர்வுகளில் 9-ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழினையும் இணைக்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதை அறியவும். இத்தகைய நேர்வுகளில் 10-ஆம் வகுப்புக்கு பதிலாக விண்ணப்பதாரர்களின் 9-ஆம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் மட்டுமே உரிய மதிப்பு வழங்கப்படும்.)**

உ) நேர்முகத் தேர்விற்கு குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் விண்ணப்பதாரர்கள் அவர்களுடைய அனைத்து சான்றிதழ்களின் அசல் மற்றும் அவற்றின் நகல் ஒன்றுடன் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும். நேர்முகத் தேர்விற்கு குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் வருகை புரியாத விண்ணப்பதாரர்கள் எந்த நிலையிலும், இது தொடர்பாக எந்த உரிமையும், கோர இயலாது. நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ள பயணப்படி ஏதும் வழங்கப்படமாட்டாது.

## <u>10. தடையில்லா சான்றிதழ்</u>:-

விண்ணப்பதாரர்கள் ஏற்கனவே பணியாற்றுபவர்களாக இருக்கும்பட்சத்தில், அவர் பணியாற்றும் அலுவலகத்தில் இருந்து தேவையான தடையில்லா சான்றிதழினை நேர்முகத் தேர்வின்போது சமர்ப்பிக்க வேண்டும்.

### <u>11. இதர நிபந்தனைகள்</u>

அ) பத்தாம் வகுப்பு / +2 அல்லது அதற்கு இணையான கல்வித் தகுதி பெறாத நபர்கள் அதை விட அதிகமான கல்வித் தகுதி பெற்றிருந்தாலும் இத்தெரிவிற்கு தகுதி உடையவர்களாக கருதப்படமாட்டார்கள்.

ஆ) இத்தெரிவிற்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதிக்கு இணையான கல்வித் தகுதி உரிமை கோரும் நபர்கள், இத்தெரிவு அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளன்றோ அதற்கு முன்னரோ வெளியிடப்பட்ட உரிய அரசாணையின் நகலை சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்காவிட்டால் தனியரது விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

இ) நேர்முகத் தேர்வில் கலந்துகொண்டு நிர்ணயிக்கப்பட்ட அனைத்து தகுதிகளையும் பூர்த்தி செய்துள்ளார் என மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் தெரிவு செய்யப்பட்ட ஒரு விண்ணப்பதாரர் அப்பணிக்கென நிர்ணயிக்கப்பட்ட தகுதிகள் அனைத்தையும் முழுமையாகப் பெற்றிருக்கவில்லையென பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அவரது தெரிவு மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் இரத்து செய்யப்படும்.

ஈ) நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ளும் விண்ணப்பதாரர்களுக்கு அவ்வாறு நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ள அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டதை மட்டுமே காரணமாக வைத்து பணி நியமனம் கோர உரிமை கிடையாது.

உ) காரணம் எதுவும் தெரிவிக்காமல் இந்த அறிவிக்கையை இரத்து செய்வதற்கு / திரும்பப் பெறுவதற்கு / திருத்துவதற்கு / கெடு தேதியை நீட்டிப்பதற்கு மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்திற்கு உரிமையுண்டு.

ஊ) விண்ணப்பதாரர்கள் அவர்களது விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கு முன்பாக இணையதளத்தில் உள்ள **"விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகளை (Instructions to the candidates)"** பகுதியை கவனமாகப் படித்து தெரிவு செய்யப்படுவதற்குரிய நிபந்தனைகளைப் புரிந்து கொள்ள வேண்டும்.

எ) விண்ணப்பத்தினைச் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் மற்றும் நேரத்திற்குப் பிறகு ஆன்லைன் மூலம் விண்ணப்பம் செய்வதற்கான வசதி நிறுத்தப்படும்.

ஏ) விண்ணப்பிக்கும் முறை குறித்து எழும் சந்தேகங்களுக்கு விண்ணப்பதாரர்கள் **www.vnrdrb2022@gmail.com** என்ற இ-மெயில் மூலம் விருதுநகர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தின் மின்னஞ்சல் முகவரியில் அலுவலக வேலை நேரங்களில் தொடர்பு கொள்ளலாம்.

உதவி மையம் தொடர்பு தொலைப்பேசி எண்: 04562 - 290769.

ஐ) விண்ணப்பதாரர்கள் தெரிவுக்கு விண்ணப்பிப்பதற்காக கொடுக்கப்பட்டுள்ள கடைசி நாள் வரை காத்திருக்காமல் அதற்கு முன்னரே போதிய கால அவகாசத்தில் விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். ஏனெனில் கடைசி நாளில் அதிகப்படியான விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்க நேரும் போது, விண்ணப்பத்தைப் பதிவேற்றம் செய்வதில் தாமதமோ அல்லது தொழில் நுட்பச் சிக்கல்கள் எழ வாய்ப்புள்ளது

மேற்கூறிய தொழில்நுட்பக் காரணங்களால் அல்லது வேறு காரணங்களால், விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பங்களைக் கடைசிக் கட்ட நாட்களில் சமர்ப்பிக்க இயலாது போனால் அதற்கு மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம் பொறுப்பாகாது.

| |
|---|
| ஆன்லைன் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் **14.11.2022 நேரம் மாலை** 05.45 மணி. |

இணைப்பதிவாளர் / தலைவர்,
விருதுநகர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம்.